Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.216/2025

**P.W**.2 (LW4)

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.செல்லா |
| Father/Husband Name | : | திரு. சுரேஷ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.03.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது திருக்கழுக்குன்றத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் காயம்பட்ட தர்ஷன் என்னுடைய மகன் ஆவார். சாட்சி சுரேஷ் என்னுடைய கணவர் ஆவார்.

2) கடந்த 25.05.2025 அன்று இரவு 9.30 மணியளவில் எனது மகன் தர்ஷன் என் வீட்டின் அருகே உள்ள கடைக்கு கல்பாக்கம் திசை நோக்கி நடந்து சென்றுக் கொண்டிருந்த போது நான் என் வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டேன். அப்போது எதிர் திசையில் ஒரு கார் மிகவும் அதிவேகமாகவும், நிதானம் இல்லாமலும் வந்து என் மகன் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அந்த கார் மோதி என் மகன் 100 மீட்டர் தூரத்திற்கு இழுத்து செல்லப்பட்டு விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய காரின்

பதிவு எண் டி என் 19 கே 2904 மாருதி ஆல்டோ கார் சில்வர் நிற கார் ஆகும். என் மகனுக்கு முகத்திலும், காதிலும் கை கால்களிலும் சிராய்பு காயம் ஏற்பட்டு மற்றும் வலது காலில் எலும்பு முறி ஏற்பட்டது. என் மகனுக்கு விபத்தில் வாய் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். நான் என் மகனை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டேன். அந்த காரை ஓட்டிய நபரை சம்பவத்தன்று நான் பார்த்தேன். விபத்து ஏற்படுத்திய நபரின் பெயர் சிலம்பரசன். அவரை எனக்கு தெரியும். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த நபர் சிலம்பரசன் தான். பின்னர் அந்த காரை விபத்தை பார்த்தவர்கள் திருக்கழுக்குன்றம் மார்க்கெட்டில் வைத்து மடக்கி பிடித்தார்கள் என்று தெரிந்துக் கொண்டேன். இது சம்மந்தமாக என்னுடைய கணவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

விபத்து குறித்து காவல் நிலையத்தில் என் கணவர் தான் புகார் கொடுத்தார். புகார் கொடுக்க நானும் என் கணவருடன் சென்றேனா என்றால் என் கணவரும் அவரது தம்பியும் புகார் கொடுக்க காவல் நிலையம் சென்றார்கள். என் மகனுக்கு விபத்தில் காயம் ஏற்பட்டது குறித்து காவல் நிலையத்தில் நான் தனியாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு குறித்து போலிசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் ஒரு வாரம் கழித்து விசாரணை செய்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் யார் விபத்து ஏற்படுத்திய காரை மடக்கி பிடித்தார்கள் என்கிற விவரம் குறித்து எனக்கு தெரியாது. யார் மடக்கி பிடித்தார்கள் என்று நான் தெரிந்துக் கொள்ள முயற்சிக்கவில்லை

என்றால் விபத்தை நேரடியாக பார்த்த நபர்கள் தான் காரை மடக்கி பிடித்தார்கள். போலிசார் விசாரணையில் நான் விபத்து குறித்து அனைத்து விவரங்களையும் கேள்விப்பட்டதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாகத்தான் பார்த்தேன். நான் தற்போது வழக்கிற்காக நேரடியாக பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்று தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் வீடும் எங்கள் வீட்டிற்கு 4 வீடு தள்ளி இருக்கிறது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் காரை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த வகையில் வாகனத்தின் பதிவு எண் எனக்கு நினைவில் இருக்கிறது என்றால் சரியல்ல. எதிரி சிலம்பரசனை எனக்கு சிறு வயதிலிருந்தே தெரியும் என்றால் சரிதான். அதனால் தான் எதிரி இந்த வழக்கில் விபத்து ஏற்படுத்தியதாகவும், விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண்ணையும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த விபத்து குறித்து எனக்கு எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்றாலும், போலிஸ் விசாரணையில் நான் கேள்விப்பட்டதாக சொல்லியுள்ள அனைத்து விவரங்களும் பொய் என்றாலும் சரியல்ல. என் வீட்டிற்கு எதிரில் தான் மளிகை கடை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் வேக தடை இருக்கும் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் நேரத்தில் மின் தடை இருந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் சாலையில் இரு புறமும் வாகன போக்குவரத்து அதிகம் இருக்கும் என்றால் சரிதான். விபத்து ஏற்பட்ட

நேரத்தில் எதிரில் உள்ள மளிகை கடைக்கு செல்வதற்காக வாகனங்களை கவனிக்காமல் என் மகன் திடீரென்று சாலையின் குறுக்கே வந்ததால் அவரது அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கும், எதிரிக்கும், விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகன்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் மகனக்கு விபத்து நஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் மகனுக்கு நஷ்ட ஈடுபெறவேண்டும் என்பதற்காக தற்போது பார்க்காத, நடக்காத ஒரு விபத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over
in the witness in the present of the accused
and admitted by the witness to be correct.
(Sd)S.Vineeth
J.M./TKM.